2010 மே 7]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகவே நான் சொல்லிவிடுகிறேன். *12-4-2010* அன்று M.L.F. சங்கத்தினர் சார்பாக கோவை மாவட்ட நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை கோரி மனு தாக்கல் செய்து L.P.F. சங்கத்தினர்மீது இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்றனர். ஆனால், கோவை மாவட்ட நீதிமன்றம் L.P.F. சங்கத்தினரை சங்கக் கட்டடத்திலிருந்து வெளியேறுமாறோ அல்லது காவல் துறைக்கு M.L.F. சங்கத்தினரை வெளியேற்றுமாறோ எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. இதையடுத்து, L.P.F. சங்கத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து *6-5-2010* அன்று status quo உத்தரவைப் பெற்றுள்ளனர். எனவே, காவல் துறையினர் இந்தப் பிரச்சினையில் அத்துமீறிச் செயல்பட்டனர் என்ற குற்றச்சாட்டு உண்மையல்ல. காவல் துறையினர் ஆரம்பத்திலேயே இப்பிரச்சினையை கோட்டாட்சியர் விசாரணைக்கு அனுப்பி நடுநிலையாகவே செயல்பட்டனர். L.P.F. சங்கத்தினர் உயர் நீதிமன்றத்தில் கோட்டாட்சியர் விசாரணைக்குத் தடையாணை பெற்ற பின்னரே சங்கக் கட்டடத்தைத் தங்கள் பொறுப்பில் ஏற்றுக்கொண்டனர். மேலும், இதுகுறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் அவர்கள் *15-4-2010* அன்று நடத்திய உண்ணாவிரதத்திற்கு அனுமதி அளித்தோம். பிறகு *3-5-2010* அன்று, M.L.F. சங்கத்தினர் காவல் துறையினர் முன் அனுமதியின்றி, சங்கக் கட்டடத்தைக் கைப்பற்றும் நோக்குடன் ஊர்வலமாகச் செல்ல முற்பட்டபோது, காவல் துறையினர் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்து, பிறகு விட்டுவிட்டார்கள். எனவே, இதில் போலீஸ் அத்துமீறல் எதுவும் கிடையாது.

முற்பகல் 9-35

(இ) தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச் சாவடிகளில் அதிகக் கட்டணம் வசூலிப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். ஒரே நேரத்திலே எல்லோரும் பேசினால் நன்றாகவா இருக்கும்? உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

[2010 மே 7

* **திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தினுடைய தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கச் சாவடிகள் அமைக்கப்பட்டு, அந்த தேசிய நெடுஞ்சாலைகளில் ஓடுகின்ற பேருந்துகளுக்கும், மற்ற வாகனங்களுக்கும் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சமீப காலமாக தமிழகத்தினுடைய எல்லா தேசிய நெடுஞ்சாலைகளும் 4 வழிச் சாலைகளாக, 6 வழிச் சாலைகளாக மாறி வருகின்ற சூழ்நிலையில், ஆங்காங்கே சுங்கச் சாவடிகள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு சுங்கச் சாவடியிலும் கட்டணத்தை வசூல் செய்கின்றபோது, நீண்ட தூரம் ஓடக்கூடிய ஒரு பேருந்தோ, அல்லது தனியார் வாகனமோ, மிக மிக அதிகமான கட்டணத்தை சுங்கக் கட்டணமாகக் கட்ட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. நான்கூட இந்த அவையிலே பேசுகின்றபோது, சென்னையிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்லுகின்ற ஒரு சாதாரண மகிழுந்து—car—போகின்றபோது, 2 பேர் பயணம் செய்தால் ஏறக்குறைய 750 ரூபாய் சுங்கக் கட்டணமாக மட்டும் செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். இன்றையதினம் விராலிமலை புள்ளியையோ அல்லது மேலூர் புள்ளியையோ கடக்கின்ற ஒரு பேருந்து, ஒரு நாளைக்கு 950 ரூபாய் சுங்கக் கட்டணம் கட்ட வேண்டியிருக்கிறது. ஒரு மாதத்திற்கு ஏறக்குறைய 29,000 ரூபாய் ஒரு பேருந்து சுங்கக் கட்டணம் மட்டும் கட்ட வேண்டியிருக்கிறது. அதுவே நகரப் பேருந்தாக இருந்தால், அந்தப் பேருந்து 56,000 ரூபாய் சுங்கக் கட்டணம் கட்ட வேண்டியிருக்கிறது. இந்த சுங்கக் கட்டணத்தையும் ஒரே மாதிரியாக வசூல் செய்யாமல், தேசிய நெடுஞ்சாலைகளில் ஒரு பகுதிக்கு ஒரு மாதிரியாகவும், மற்றொரு பகுதிக்கு மற்றொரு மாதிரியாகவும் வசூலிக்கிறார்கள். உதாரணமாக, தேசிய நெடுஞ்சாலை 45-B-யிலே multiple entry, அதாவது ஒரே பஸ் இரண்டு, மூன்று தடவைகள் போய் வந்தால் அதற்கு அனுமதி இல்லை. ஆனால், தேசிய நெடுஞ்சாலை எண் 45-லே multiple entry-ஐ permit பண்ணுகிறார்கள்.

அரசு வசூலிக்கின்ற road tax-ஐவிட—அரசு ஓர் இருக்கைக்கு road tax வசூல் பண்ணுகிறது. அந்த road tax வசூலைவிட, அந்த road tax-க்குக் கட்டுகின்ற தொகையை விட—சுங்கக் கட்டணம்—3 மாதத்திற்கு 30,000 ரூபாய்தான் road tax வசூலிக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். ஆனால்—3 மாதத்திற்கு ஏறக்குறைய 75,000 ரூபாய், 80,000 ரூபாய் சுங்கக் கட்டணம் வசூலிக்கின்ற நிலை இருக்கிறது. மாட்டினுடைய பாலைக் கறந்து சாப்பிடலாம். ஆனால், மாட்டின்

2010 மே 7] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

மடியையே அறுக்கின்ற வகையில்தான் இந்த சுங்க வசூல் இருக்கிறதென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, வரியோ, கட்டணமோ, எப்படி அரசாங்கம் வசூலிக்கவேண்டுமென்று சொன்னால், பூக்களின்மீது உட்கார்ந்து தேன் எடுக்கின்ற வண்டைப்போல, பூவுக்கும் நோகாமல், வண்டுக்கும் நோகாமல் தேன் எடுப்பதைப்போல வரியும், கட்டணமும் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால், இது ஒரு நாளைக்கு, ஒரு பேருந்துக்கு 950 ரூபாய், ஒரு மாதத்திற்கு 30,000 ரூபாய், ஒரு நகரப் பேருந்துக்கு ஒரு மாதத்திற்கு 56,000 ரூபாய் என்று சொன்னால், பேருந்துகளை எப்படி ஓட்ட முடியும்? நாம் ஏற்கெனவே, டீசல் விலையை எத்தனை முறை உயர்த்தினாலும்கூட பேருந்துக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று வைத்திருக்கிறோம். அவர்களைக் கூப்பிட்டு அரசாங்கப் பேருந்துகளுக்கு அரசு முடிவு எடுக்கின்ற வரை கட்டணம் வசூலிக்க வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தனியார் பேருந்துகளை இப்போது ஓட்ட முடியவில்லை என்று சொல்லி, விராலிமலை, திருச்சி, புதுக்கோட்டை போன்ற பகுதிகளிலே பேருந்துகளை நிறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, தங்கள்மூலமாக, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, இந்த அநியாய வசூலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க இந்த அவையின் கவனத்தைக் கோரி, அமருகின்றேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த subject-ல்தான் பேசுகிறீர்களா? *(குறுக்கீடு)* இந்த subject-தானா? *(குறுக்கீடு)* இந்த subject என்றால், பேசுங்கள் அல்லது உட்காருங்கள் *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் . . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் பொறுங்கள். நீங்கள் இந்த subject-லே பேசுகிறீர்களா? *(குறுக்கீடு)*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஆமாம்.

[2010 மே 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, திரு. ஓ. பன்னீர்செல்வம், பேசுங்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே ஒரு நல்ல அரசு, சேவைத் துறையில் பல்வேறு பொது நல நோக்கோடு மக்களுக்குச் சேவையாற்றுகின்றபோது, சாலை வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி, இம்மாதிரியான பணிகளையெல்லாம் பொது மக்களின் நலன் கருதித்தான் அந்தந்தத் துறைகளில் சேவையாகவே செய்து வருகிறது. இடையில் சில ஏஜென்சிகள் சாலை வசதிகளை மேம்படுத்துவது என்ற ஒரு நிலையை எடுத்து, சுங்க வரியை வசூலிக்கலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியது. ஆனால், சுங்க வரியை நியாயமான முறையில் அவர்கள் வசூலிக்க வேண்டும். அதைக் கண்காணிக்க வேண்டியது ஓர் அரசினுடைய கடமை. 2004-2005-ல்கூட E.C.R.-ல் அந்தச் சாலை வசதியைச் செய்து கொடுத்தவர்கள், தங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி அரசுக்குக் கோரிக்கை வைத்தபொழுது, மாண்புமிகு அம்மா அவர்கள் தீர்க்கதரிசனமாகச் சொன்னார்கள். மக்களின் நலன் கருதி, எந்தவிதத்திலும் நாங்கள் toll வரியை உயர்த்தித் தரமாட்டோம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நேரத்திலே அவர்களுக்கு பதில் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், ஒரு தனியார் கார் தென்மாவட்டங்களிலிருந்து சென்னை வர வேண்டுமென்றால், அவர்கள் விமானத்தில் வருவதைக் காட்டிலும் காரில் வருவது அதிகப்படியான செலவினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை. பொது நோக்கோடு ஒரு அரசு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவழித்து மக்களின் நன்மைக்காகப் போடுகின்ற சாலை, இப்படித் தனிப்பட்ட ஒருவருடைய, சில ஏஜென்சியினுடைய வணிக ரீதியான ஒரு தொழிலுக்கு இது முன்னுதாரணமாக அமைகின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இதையெல்லாம் அரசு ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து, அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, ஒப்பந்தம் போடப்பட்டிருந்தால், minimum-ஆக, அவர்கள் எவ்வளவு செலவழித்திருக்கிறார்கள், அதனை எத்தனை வருடங்களில் வசூலித்தால் அவர்களுக்கு அந்தத் தொகையை ஈடுகட்ட முடியும் என்ற நிலையை ஆராய்ந்து, அந்த சுங்க வரியைக் குறைத்து வசூலிக்க வேண்டும். இல்லையென்றால், அவர்கள் போட்ட சாலைக்கு எவ்வளவு கோடியானாலும் அரசு மக்களின்

2010 மே 7] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நலன் கருதி அதை அவர்களுக்குக் கொடுத்து, மக்களை இந்தப் பிரச்சினையிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.*

திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு சுங்கச் சாவடியிலே வாகன உபயோகிப்புக் கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மை. அதோடு, சுங்கச் சாவடி அமைக்கப்படுகின்ற இடங்கள் சட்ட விதிகளுக்குட்பட்டு அமைக்கப்படும் என்று நேற்றுக்கூட மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் பேசும்போது சொன்னார். 50 கிலோ மீட்டருக்கு இடையிலே அமைக்கப்படமாட்டாது என்று சொன்னார். ஆனால், தருமபுரி சுங்கச் சாவடியும், ஓமலூர் சுங்கச் சாவடியும் 50 கிலோ மீட்டருக்குள்ளாக, 34 கிலோ மீட்டருக்குள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய விதிகளுக்கு மீறி அமைக்கப்பட்டது என்பது ஒன்று.*

இன்னொன்று, மத்திய அரசு நிதியிலே போடப்பட்ட சாலை அந்தச் சாலை. அங்கே தனியார் நிறுவனத்தினுடைய சுங்கச் சாவடி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த M.V.R. என்ற தனியார் நிறுவனம் சேலம்-நாமக்கல் சாலையில்—சேலத்திலிருந்து நாமக்கல் வரை 248 கிலோ மீட்டருக்கு பை-பாஸ் சாலையை அவர்களது சொந்த நிதியிலிருந்து போட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தச் சாலையில் சுங்கச் சாவடி அமைக்கப்படவில்லை. சேலத்திலிருந்து செல்லுகின்ற வாகனங்கள், நாமக்கல்லில் இருந்து வருகின்ற வாகனங்கள் எல்லாம் சுங்கச் சாவடிக்கு கட்டணம் கட்டாமல் வந்துகொண்டிருக்கின்றன. தாரமங்கலம், மேட்டூர், தருமபுரியிலே இருந்து சேலம் வந்து செல்கின்ற அந்த வாகனங்கள் தருமபுரி சுங்கச் சாவடியிலும் பணம் கட்டி, ஓமலூர் சுங்கச் சாவடியிலும் கட்டுகின்ற ஒரு நிலை இருக்கிறது. இதுகுறித்து நாங்கள் எல்லாம் புகார் கொடுத்து, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய திட்ட இயக்குநர் C.B.I. ஆல் 100 கோடி ரூபாய் ஊழலிலே கைது செய்யப்பட்டு, அவர்மீது வழக்குப் பதிவு

[திரு. அ. தமிழரசு] [2010 மே 7

செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்த வாகன உபயோகக் கட்டணம் அதிகமாக வசூல் செய்வதையும், இந்த சுங்கச் சாவடி அமைந்துள்ள இடத்தை, சரியான இடத்திலே, அது சட்ட விதிகளின்படிதான் அமைந்திருக்கின்றதா என்பதை ஆராய்ந்து ஓமலூர் சுங்கச் சாவடியை மாற்றியமைக்க வேண்டுமென்று கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் பேசிய பல்வேறு உறுப்பினர்கள் தமிழகத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கக்கூடிய அனைத்து 4 வழிச் சாலைகளிலும் இன்றைக்கு சுங்கக் கட்டணம் கூடுதலாக வசூலிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 6 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழகத்தைப் பொறுத்தவரை 2, 3 இடங்களில் கட்டப்பட்ட பாலங்களுக்கு மட்டும்தான், ஒரு 6, 7 ஆண்டுகளுக்கு முன்பாக கரூர் பாலமாக இருக்கலாம் அல்லது கோவையிலே இருக்கின்ற ஆற்றுப் பாலமாக இருக்கலாம், வேறு சில இடங்களில் இருக்கக்கூடிய சில பாலங்களில் மட்டும் இந்தச் சுங்கச் சாவடிக் கட்டணம் வசூலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு தங்க நாற்கரச் சாலைகளை நாங்கள் அமைத்திருக்கிறோம் என்று சொல்லி, தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே 4 வழிச் சாலைகள் அமைக்கப்பட்டதற்குப் பின்பு, 50 கிலோ மீட்டர் தூரம் இல்லாமல், 30 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக பல்வேறு சுங்கச் சாவடிகள் என்பது தமிழகத்திலே நான்கு வழிச்சாலைகள் அமைக்கப்பட்ட பிறகு இன்றைக்குப் போக்குவரத்து வாகனங்கள் அவர்கள் செலுத்தக்கூடிய சாலை வரியைவிடக் கூடுதலாக சுங்கக் கட்டணம் செலுத்த வேண்டுமென்ற கட்டாயம் பல்வேறு பகுதிகளிலே ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவினுடைய பல்வேறு பகுதிகளிலே ஏற்பட்டிருக்கிறது. சாலை வசதிகள் ஒரு நாட்டினுடைய உள்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துவதற்கு சரியான தேவையாக, அதற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய காரணத்தினால், அரசாங்கம் இந்தச் சாலைகளை மேம்படுத்தியிருக்கக்கூடிய தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்துவிட்டு, இந்தச் சாலைகளை மக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதைக் கேட்டு, அமர்கிறேன்.

2010 மே 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்க வரி வசூலிப்பது குறித்து இங்கே கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, மத்திய அரசாங்கத்தினுடைய திட்டத்தின் அடிப்படையில் சாலை மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுகின்றன. திட்டமிடுதல், கட்டுதல், பராமரித்தல் என்ற அடிப்படையிலே இதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் நடைபெறுகின்றன. இந்தத் திட்டம் உலக வங்கி நிதியோடு சேர்த்துச் செய்யப்படுகிறது. நாங்கள் ஏற்கெனவே பல முறை இதைப்பற்றிக் கருத்துக் கூறுகிறபோது தனியாரிடம் ஒப்படைக்கக்கூடாது, இதன்மூலமாக பெரிய அளவிலே சுங்க வரி வசூலிக்கப்படுகிறது என்ற கருத்தைச் சொல்லி, அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆனாலும் இந்த முறையை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது, மாநில அரசு ஏற்றிருக்கிறது. ஆனாலும், வரி அதிகமாக இருக்கிறது. இது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும் அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று எங்களுடைய அரசு அலுவலர்களும், தனியார் பேருந்து உரிமையாளர்களும், விராலிமலை அருகில் சுங்கக் கட்டண வசூல் பண்ணுகின்ற இடத்தில், ஒரு பேருந்துக்கு 950 ரூபாய் ஒரு நாளைக்கு வசூல் செய்கின்றார்கள் என்ற ஒரு குறிப்பைத் தந்து, நிலைமை இதுபோல் இருக்கிறது, நீங்கள் உடனடியாக அவர்களை அழைத்துப் பேசுங்கள் என்று தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், உள் துறைச் செயலாளர் அவர்களுக்கும் சொல்லி, தலைமைச் செயலாளரும் அவர்களை அழைத்துப் பேசி, முழு விவரங்களையும் பெற்றிருக்கிறார்கள்.

அதற்கிடையில், திருச்சியிலே மாவட்ட ஆட்சித் தலைவரையும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரையும் அழைத்து இது பற்றி உடனடியாக நீங்கள் அந்த நிறுவனத்தை அழைத்துப்

பேசுங்கள் என்று சொன்னோம். ஏற்கெனவே, மேலூரில் இருக்கின்ற அந்தக் கட்டண வசூல் பண்ணுகின்ற இடத்தில், ஒரு முறை ஒரு பேருந்து சென்றால், 50 ரூபாய் என்று வைத்துக்கொண்டால், அந்தப் பேருந்து பொதுப் பேருந்தாக இருந்தாலும், தனியார் பேருந்தாக இருந்தாலும், அது எவ்வளவு கிலோ மீட்டர் தூரம் உபயோகப்படுத்துகிறார்களோ, அந்த கிலோ மீட்டருக்கு மட்டும்தான் கட்டணம் வசூலிக்கப்படவேண்டுமென்று நீதிமன்றத்திலே ஒரு ஆணையைப் பெற்று, மேலூரிலே இருக்கின்ற அந்த இடத்திலும் வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். அதை முன்மாதிரியாகக் காட்டி நீங்கள் பேசுங்கள் என்று சொன்னபோது, அந்த தேசிய நெடுஞ்சாலையினுடைய திட்ட அலுவலர்-Project Director, 'இது புதிய முறையிலே ஏற்படுத்தியிருக்கின்ற ஒப்பந்தம். ஏற்கெனவே, கட்டணம் குறைவாக இருக்கின்ற இடங்களிலேயெல்லாம் முன்பே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம். எனவே, உடனடியாக இதைப் பற்றி நாங்கள் முடிவு செய்ய முடியாது. இதை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய தலைவர், Chairman-க்குத் தெரிவித்து நாங்கள் பேசுகின்றோம்' என்று சொன்னார்கள்.

அதற்கிடையில், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் விடுப்பில் இருக்கின்ற காரணத்தால் மாவட்ட வருவாய் அலுவலர் இன்றைக்கு Project Director, நம்முடைய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய திட்ட அலுவலர் மற்றும் அதிகாரிகளோடு நம்முடைய அரசு அலுவலர்கள் அனைவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்கு ஒரு நல்ல முடிவெடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

சமயபுரத்தில் இருக்கின்ற Toll gate-ல், ஒன்றுக்கு ஒன்றரைப் பங்கு, 50 ரூபாய் என்றால் 75 ரூபாய் மட்டுமே பெற்றுக்கொள்கிறார்கள். அதை முன்மாதிரியாகக் காட்டி வாங்குங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனினும், இதைப் பற்றி எடுக்கவேண்டிய முடிவு என்பது மத்திய அரசுதான் எடுக்கவேண்டும். எனவே, மத்திய அரசுக்கு இப்போது இந்த தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே நல்ல முடிவு ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

இதைவிட இந்திய அளவில் இருக்கின்ற அந்த Lorry Owners' Association நேரடியாக மத்திய அமைச்சரிடம் சென்று, இந்தியா

2010 மே 7] [திரு. கே.என். நேரு]

முழுவதும் ஒரே மாதிரியான கட்டண வசூல் அமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மத்திய அமைச்சரும் அழைத்து, அதைப் பற்றி ஆலோசித்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிலேதான் National Permit என்பதில் இன்றைக்கு அந்தப் பேச்சுவார்த்தையிலே ஒரு உடன்பாடு ஏற்பட்டு, 15 ஆயிரம் ரூபாய் கட்டினால் இந்தியா முழுவதும் எங்கு வேண்டுமென்றாலும் போகலாம் என்ற முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்ததாக இது வந்திருக்கிறது. எனவே, விரைவில் நல்லதொரு முடிவு ஏற்பட இந்த அரசு தொடர்ந்து முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) பள்ளிகளில் கல்விக் கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பள்ளிகளெல்லாம் கல்விக் கட்டணத்தை அதிகமாக வசூலிக்கின்றன என்கிற ஒரு கருத்து வந்த பிறகு, நம்முடைய தமிழக அரசு இதற்காக ஒரு குழுவை அமைத்து, முன்னாள் நீதிபதி கோவிந்தராஜன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவைப் போட்டு, அந்தக் குழுவும் பரிந்துரை செய்து, தமிழக அரசின் இந்தச் சட்டமன்றம் இயற்றிய சட்டம், அதாவது கல்விக் கட்டண வரன்முறைச் சட்டம் செல்லும் என்று தீர்ப்பு வழங்கிய பிறகும்கூட, இன்று பல பள்ளிகள், நீங்கள் அரசு-மே மாதம் 15 ஆம் தேதி வரை application கொடுக்கவேண்டும், அரசு தொகையை அறிவித்த பிறகுதான், கல்விக் கட்டணத்தை வசூல் செய்யவேண்டுமென்ற நிலையைச் சொன்ன பிறகும்கூட, பல பள்ளிகள் கல்விக் கட்டணத்தை அதிகமாக உயர்த்தி, கல்விக் கொள்ளையாகவே நடத்தி, இன்று பணம் எல்லாம் வசூல் செய்து, admission-ஐயே துண்டுச் சீட்டில் எழுதி எல்லாவற்றையும் முடித்துவிட்டார்கள்.

அதேபோல, சமச்சீர்க் கல்வியைப் பொறுத்த அளவிலும் இப்போது தீர்ப்பு வந்திருக்கிறது. ஒன்றாம் வகுப்பு, ஆறாம் வகுப்பிற்கு மட்டும்தான் இந்த சமச்சீர்க் கல்வி அமல்படுத்தப்படவேண்டுமென்றும், மற்ற வகுப்புகளுக்கெல்லாம் இப்போது நம்முடைய அரசு, ஏற்கெனவே எந்தெந்தப் பாடப்